REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 8உ வியாழன் (23—12—54) ★ ★ வெளியீடு: மார்கழி 9உ வெள்ளி (24—12—54) [இதழ் 165

## ஷேக் அப்துல்லா சிறை வாழ்வில்......!

காஷ்மீரின் முன்னாள் பிரதமரான ஷேக் அப்துல்லா அவரது ஐந்து சகாக்களும் கடந்த எழுமாதமாக சிறையில் இருக்கிறார்களல்லவா? அவர்களுக்காக இதுவரை ரூ. 31 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளதாக அரசாங்க குறிப்பு ஒன்று கூறுகிறது.

அவர்கள் ஜம்முவில் உள்ள 'கட்' எனும் இடத்திலிருக்கும் சிறைச்சாலையிலிருக்கின்றனர்.

இந்தக் காவல் கைதிகளுக்கு முதல் வகுப்பு உணவு, பத்திரிகைகள் புத்தகங்கள், இன்னும் இதர வசதிகளும் தரப்பட்டுள்ளனவாம். மேலும் சிறைக்குள்ளேயே பொழுதுபோக்கிற்கான வசதிகள் தரப்படுவதுடன் நல்ல உடுப்புகளும் படுக்கை வசதிகளும் தரப்பட்டுள்ளனவாம்.

## 4 லட்சம் தேயிலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்?

சம்பள உயர்வு பற்றிய பேச்சுவார்த்தைகள் எதிரொலி

இலங்கை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும், தோட்ட முதலாளிகளுக்குமிடையே தொழிலாளரின் கூலி உயர்வு பிரச்சினை குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிந்ததின் எதிரொலியாக தேயிலைத் தொழிலாளர்கள் சுமார் 4 லட்சம் பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடலாம் எனத் தெரிகிறது.

அப்படி அவர்கள் வேலை நிறுத்தம் செய்வார்களானால் இலங்கையின் தேயிலைத் தொழிலே நிலை நின்றுவிடும் எனச் சொல்லப்படுகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் ஆகியவற்றின் நிர்வாகக் குழுக்களின் கூட்டுக் கூட்டம் நுவரேலியாவில் நடைபெறும் போது வேலை நிறுத்தம் பற்றிய இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

## பயன்பெற்றனர்!

சென்னை, டிச. 23—

கடந்த அக்டோபர் திங்கள் இறுதிவரை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 'செஸ்' நிதியிலிருந்து ரூ. 16,48,288 - அளிக்கப் பட்டதினால் சங்க நெசவாளி—உறுப்பினர்கள் 1,14,455- பேர் பயனடைந்துள்ளனரென, சென்னை சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்.

## வேலியே பயிரை மேய்கிறது!

### "பட்டம் மீது நம்பிக்கையில்லை"

திரு-கொ. ம. சோ. கட்சி நிர்வாகக் குழுவில் தீர்மானம்

கோட்டயம், டிச. 22—

அடுத்து நடைபெற இருக்கும் திரு-கொச்சி மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் நிர்வாகக் குழு கூட்டத்தில், கே. கே. கண்ணன் என்ற உறுப்பினர், ம. சோ. கட்சி மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கோண்டுவருவார் என்று தெரிகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான நோட்டீசுகள் கொடுக்கப்பட்டுவிட்டனவென்றும், மாநில ம. சோ. கட்சியின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுவிட்டன என்றும் தெரிகிறது.

இதுபோன்றே அகில இந்திய ம. சோ. கட்சியின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றித் தெரிவிக்கப்பட்டுவிட்டதாம்.

## ஓங்கோல் தொகுதியில் பிரகாசம் போட்டியிடுவார்

கர்னூல், டிச. 22—

ஆந்திர கேசரி பிரகாசம் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் ஓங்கோல் தொகுதியில் போட்டியிடுவார் என்று கூறப்படுகிறது.

இவரை எதிர்த்து கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த எம். நாராயணசாமி போட்டியிடுவார் என்று தெரிகிறது.

## வேலையில்லாத் திண்டாட்டம் - முதலாளித்துவத்தின் பயனே

### சோஷலிச முறையே அதனைத் தடுக்க இயலும்

பண்டித நேரு கருத்து

புதுடில்லி, டிச. 22—

"வேலையில்லாத் திண்டாட்டம் என்பது முதலாளித்துவப் பொருளாதார முறையின் உள்ளடக்கமேயாகும்; சோஷலிச பொருளாதார முறையினால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்க்க முடியும்."

"ஆனால், சோஷலிச முறையை அமைக்கக் காலம் செல்லும்; சோஷலிச அமைப்பிற்கு செல்வத்தைப் பெருக்க வேண்டும்; இல்லையேல், அனைவரிடையேயும் வறுமையைப் பங்கிட வேண்டிய நிலைமைதான் ஏற்படும்,"

—என்று, பண்டித நேரு, காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டாரெனத் தெரிகிறது.

அவர் மேலும் எடுத்துக்காட்டியதாவது :—

"சீனாவில், தலைவர்கள்கூட தற்போதைய நிலையில் தங்கள் குறிக்கோளை அடைய 20 ஆண்டுகாலம் செல்லுமென்று நினைக்கிறார்கள்; இந்தியாவில் ஜனநாயக அமைப்பின்மூலம் சோஷலிசகுறிக்கோளை அடைய எவ்வளவு காலம் செல்லுமென்று நிச்சயிப்பது இயலாது.

"சோஷலிச அமைப்பு ஏற்படும் வரை தனி நபரின் முயற்சிகளுக்கு இடமிருக்க வேண்டும்; இல்லையேல், பொது முயற்சி தாமதமாகும்; போட்டி மனப்பான்மையை வளர்க்க தனி நபரின் பங்கு நன்கு பயன்படும்."

★

## நெய்வேலி நிலக்கரி திட்டம்

### நிபுணர் முடிவை ஆராய மாநாடு

★

சென்னை, டிச. 23—

நெய்வேலி நிலக்கரி திட்டத்தைக் குறித்து நிபுணர்கள் ஆராய்ந்து அறிந்த தங்கள் முடிவை, இந்தியப் பேரரசிடம் அறிக்கை உருவில் கொடுத்துள்ளனர்.

அம்முடிவை மேற்கொண்டு செயலாற்றுவதா கூடாதா என்பதை நிர்ணயிப்பதற்காக, சென்னை அரசாங்க அலுவலகத்தில், இந்தியப் பேரரசின் சார்பிலும், நிபுணர்கள் சார்பிலும், சென்னை அரசாங்கத்தின் சார்பிலும் ஆய்வுக் கூட்டம் ஒன்று இத்திங்கள் 27-ந் தேதி நடைபெற இருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்தியப் பேரரசின் சார்பில் வர்த்தக, தொழில் அமைச்சராக இருக்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், சில மத்திய அரசாங்க அதிகாரிகளும் மேற்படி கூட்டத்தில் பங்கு கொள்வர் எனத் தகவல் தரப்படுகிறது.

## "முதலாளிகளுக்கு நன்மை புரியும் திட்டம்"

பிர்லா பாராட்டுகிறார்

"அடுத்து வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலதனத் தொகையான ரூ. 5000 கோடியில் பாதி அளவு தனி நபரின் தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது தனி நபர் முயற்சிக்கு விடுக்கப்பட்ட சவால் ஆகும்,"

என்று, இந்தியத் தொழில் அதிபர் ஜி. டி. பிர்லா இந்திய சர்க்காரின் புதிய பொருளாதாரக் கொள்கையைப் பாராட்டியிருக்கிறார்.

"சர்க்காரின் பொருளாதாரக் கொள்கையைக் கண்டு அஞ்சத் தேவையில்லை," என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

"இந்தியாவுக்குத் தேவையுள்ள எல்லாவற்றையும் தனி நபர்களே செய்து முடிப்பது இயலாததாகும்; சர்க்காரின் முயற்சியும் அவசியம்," என்றும் அவர் கூறினார்.

"இப்போது இந்தியாவின் பிரச்சினை வேலை இல்லாத் திண்டாட்டமாகும்; அதைப் போக்குவதற்கு எஃகுத் தொழிற்சாலைகள், எஞ்சினீயரிங் தொழிற்சாலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள் ஆகியவை அமைக்கப்பட வேண்டும்" என்றும் பிர்லா குறிப்பிட்டார்.

"இந்த வேலையை யார் செய்வது என்பதல்ல பிரச்சினை; பொது முயற்சியோ, அல்லது தனி நபர் முயற்சியோ எதுவானாலும், நமது குறிக்கோள் நிறைவேற வேண்டும்; 240 லட்சம் புதிய வேலைகள் உற்பத்தியாக வேண்டும்; மக்களின் வாழ்க்கைத்தர உயர்வும், செல்வம் மக்களிடையே பரவலாக பிரிக்கப்பட வேண்டியதும்தான் நமது குறிக்கோள்," என்று பிர்லா மேலும் கூறினார்.

## ஏட்டுச் சுரைக்காய்!

"சோஷலிச சமூக அமைப்புத்தான் நமது நாட்டுப் பொருளாதாரக் கொள்கையின் இலட்சியமாக இருக்கவேண்டும்" என்று, மத்திய மக்கள் சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

## மக்கள் சீனாவை 'சுதந்திர நாடு' என்று ஒப்ப இயலாதாம்!

### ஜப்பான் சர்க்காரின் விசித்திர நிலை!

'கம்யூனிஸ்டு சீனாவை, சட்டப்படி, ஒரு நாடு என்று ஜப்பான் ஒப்புக்கொள்ளாது' என்று ஜப்பானியப் பிரதமர் ஹாட்டோயாமா கூறினார்.

ஜப்பானியப் பாராளுமன்ற குழு கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

"இதுவரை ஜப்பானிய சர்க்கார் தலைவர்களினால் சொல்லப்பட்ட கருத்துக்களிலிருந்து, 'மக்கள் சீனா ஒரு தனி சுதந்திர நாடு,' என்று ஒப்புக் கொள்வது அவசியம் இல்லை என்றுதான் பொருள் கொள்ளவேண்டும்" என்று அவர் சொன்னார்.

"சீனாவில் கம்யூனிஸ்டு சார்பு ஆட்சியுள்ளது; அது, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தையும், மக்களையும் ஆட்சி செய்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன்" என்று அவர் மேலும் கூறினார்.

டிசம்பர் 15-ல் அவர் வானொலியில் பேசுகையில் கூறியதாவது:—

"பீகிங், தைப்பே இரண்டும் தனித் தனி நாடுகள்; அவைகளுக்கிடையே உறவு எப்படி மோசமாக இருந்தாலும் கவலையில்லை; இரண்டு நாடுகளுடனும் அண்டை நாடுகள் என்ற முறையில் ஜப்பான் நேச உறவை நீடிக்க வேண்டும்."

மறுநாள் பேசிய ஜப்பான் வெளிநாட்டமைச்சர் ஷிக்மிட்சு கூறியதாவது :—

"தைப்பே அரசை தனி நாடாக ஜப்பான் ஒப்புக் கொண்டிருக்கிறது; ஒரே நேரத்தில் இரு நாடுகளை ஒப்புக்கொள்ளும் நோக்கம் ஜப்பானுக்குக் கிடையாது; ஆனால், சீனாவில், பீகிங் ஆட்சி உருவாகியிருக்கிறது என்பதை அறிவோம்; அதனுடன் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய நான் விரும்புகிறேன்."

## இந்தி கட்டாய பாடமில்லை!

### அரசாங்கக் கொள்கை விளக்கம்

சென்னை, டிச. 21—

சென்னை நகரில் உள்ள 62 செகண்டரி பள்ளிகளில் மூன்றாவது மொழியாக இந்தி கற்பிக்கப்படுகிறது எனவும், இரண்டாவது மொழியாக மாநிலத்தில் எங்கும் போதிக்கப்படுவதில்லை எனவும், சென்னை சட்ட சபையில் எழுந்த கேள்வி ஒன்றுக்கு கல்வி அமைச்சர் பதில் அளித்தார்.

அதே பள்ளிகளில் முதல் பிரிவைச் சேர்ந்த முதல் மொழியாக இந்தி கற்பிக்கப்பட்டு வருகிறது என்றும், அதே அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தி மொழி கற்பதைத் துரிதப் படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தபோதிலும், அதைக் கட்டாய போதனையாக்குவதில் விருப்பவில்லை என்றும், அமைச்சர், அரசாங்கக் கொள்கையை விளக்கினார்.

## ஒத்திவைக்கப்பட்டது

பம்பாய், டிச. 23—

பி. டி. ஐ. (பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா) நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர் இன்று மேற்கொள்ளவிருந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டதென்று தெரிகிறது.

## ஆராய்ச்சி முன்னேறுகிறது

வானவெளியில் (ஆகாயத்தில்) செயற்கைச் சந்திர மண்டலங்களை உருவாக்குவது பற்றிய இரகசிய ஆராய்ச்சி முன்னேறிக் கொண்டு வருவதாக அமெரிக்கப் பாதுகாப்பு இலாகா அறிவித்துள்ளது.

## விற்பனை வரி கொடுக்காதவர்கள்

கோவை மாவட்டத்தில் அதிகம்

1952–53ம் ஆண்டில், சென்னை சர்க்காருக்குச் சேரவேண்டிய விற்பனை வரியைக் கொடுக்காததற்காக தொடரப்பட்ட வழக்குகள் 5734 என்றும், இவ்வழக்குகள் சம்பந்தமான மொத்த வரித் தொகை ஏறக்குறைய ரூ. 7 இலட்சம் என்றும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் - சட்ட (மேல்) சபையில் அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார்.

இந்த வழக்குகள் கோவை மாவட்டத்தில்தான் அதிகமென்றும், 1,496 வழக்குகள் இவ்வட்டத்தில் தொடரப்பட்டதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விற்பனை வரி வசூல் செய்யும் அதிகாரிகள் வீணான தொல்லைகள் தருவதாகக் கூறி, சில வியாபாரிகளிடமிருந்து வந்த புகார்கள் அவ்வப்போது சர்க்காரால் கவனிக்கப்பட்டு, உடனடி விசாரணை செய்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 23—12—1954 வியாழன்


# ஊமைக்கு உளறுவாயன் மேல்!

தமிழ் நாட்டில் வழங்கும் முதுமொழி ஒன்றைத் தலைப்பில் குறிப்பிட்டிருக்கிறோம். அம்மொழியில் பொதிந்து கிடக்கும் உண்மையை வலியுறுத்தும் வகையில்தான் தனது பேச்சின்மூலம் சென்னை அரசாங்க நிதி அமைச்சர் காட்டி வருகிறார்.

சென்னை அரசாங்க முதலமைச்சராக இருக்கும் கனம் காமராசர் அவர்கள், அவசியம் இருந்தாலும் இல்லாமற்போனாலும் அதிகமாகப் பேசும் பழக்கமற்றவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

அவர் எந்த அளவு குறைவாகப் பேசுகிறாரோ, அந்த அளவு, அவசியமிருந்தாலும், இல்லாமற்போனாலும், வரம்பு கடந்து பேசுவதில் முதற் பரிசு பெறக்கூடியவராக நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் இருந்து வருகிறார் என்பதும் நாம் குறிப்பிடாமலே நாட்டினர் அறிந்துள்ள சேதியாகும். முதல் மந்திரிதான் மோன நிலையை எப்பொழுதும் முறிக்க மனமில்லாதவர்போல் நடந்துகொள்கிறாரே, அவருடைய பேச்சின் சாரத்தையும் தானே பயன்படுத்திக்கொண்டு, தேவையான அளவிற்குக் கூடுதலாகவும், பேசப் புகுந்த விஷயத்திற்குப் புறம்பான விஷயங்களையும் வலிய இழுத்துப் பேசித் தீர்த்துவிடுவதுதான் முறையாகும் என நிதி அமைச்சர் முடிவுக்கு வந்திருக்கின்ற காரணத்தினாலோ என்னவோ, நிதி அமைச்சர் பேசும் வாய்ப்பு கிடைக்கிறபோதெல்லாம், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத விஷயங்களை உளறிவழிகிறார். அவருடைய நிலை கண்டு நாம் ஆத்திரம் கொள்ளவில்லை; ஆனால், அவர்பால் இரக்கப்படுகிறோம்.

குறிப்பிட்ட ஒரு விவகாரத்தில், தான் எப்படி நடந்து கொள்ளுவேன் என நெருங்கிய நண்பர்களிடம் வாக்குறுதியளித்துவிட்ட ஒருவர், வாய்ப்பு ஏற்படுகிறகாலை, முன்னர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற எவ்வாறு மூர்க்கத்தனமாகவும் முரட்டுப் பிடிவாதத்துடனும் நடந்து கொள்ளுவாரோ, அதே போன்று, எதிர்காலத்தில் தமிழ் நாடகத் துறையை சீரழிக்கக் காத்துக்கிடக்கும் கொடிய ஏற்பாடான நாடக சட்டத்தை, நிதி அமைச்சர் நிறைவேற்றியே விட்டார். மசோதாவும் சட்டமாகி சட்ட புத்தகத்திலும் இடம் பெற்றுவிட்டது. சட்டத்தின் முதற் பணியான, ஆரிய இராமனின் அவதாரப் பெருமைக்குக் களங்கம் ஏற்படாமல் பாதுகாக்கும் வேலையை உடனடியாக சென்னை அரசாங்கம் மேற்கொள்ளப்போகிறது என்பதில் ஒருவருக்கும் ஐயமிருக்க நியாயமில்லை.

நாடக மசோதா மீது பொறுப்பான வட்டாரங்களில் இருந்து கிளம்பிய கொதிப்பைத் தணிக்கும் நோக்குடன் வெறும் கண் துடைப்பு வேலையாக, நாடக மசோதாவை ஆராய்ந்து தேவைப்படும் திருத்தங்களைச் செய்ய ஒரு ஆய்வுக் குழுவை சென்னை அரசாங்கம் நியமித்தது. அம்மசோதாவினால் நேரடியாகப் பாதிக்கப்படும் நன்மக்களிடமிருந்து கருத்தறிவது என்ற ஓரங்க நாடகத்தையும், அக்கண் துடைப்பு ஆய்வுக் குழுவின் மூலம் நிதி அமைச்சர் நடத்திக் காட்டினார்.

அவ்வாய்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த சட்டசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும், மசோதாவின் கோட்பாட்டிற்கு எதிராகவே தங்கள் எதிர்ப்புக் கருத்தைத் திட்டவட்டமாக உரைத்தும் விட்டனர். ஆய்வுக் குழு அறிக்கையில் அவ்வெதிர்ப்பை எழுத்து மூலம் காட்டிக்கொண்டதுடன் நில்லாமல், சட்டசபையில் மசோதா பிரிவு பிரிவாக விவாதிக்கப்பட்ட நிலையிலும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மசோதாவைத் தாங்கள் எதிர்ப்பதற்கானக் கருத்தை விளக்கியும் கூறியுள்ளனர். அவர்கள் கூறிய அவ்வளவு விளக்கமும், செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்துவிட்டது. மசோதா சட்டமாகி, சட்டப் புத்தகத்திலும் ஏறிவிட்டது.

திருத்தப்பட்ட நாடக சட்டத்தை, குறிப்பிட்ட நாடகத் துறையினர் பாராட்டி வரவேற்கின்றனர் என்வும் நிதி அமைச்சர் சட்டசபையில் கூறியுள்ளார். அப்பாராட்டையும், வரவேற்பையும் நிதி அமைச்சர் அறிந்துள்ளது போலவே நாமும் அறிந்தே இருக்கிறோம். புதிய நாடக மசோதா, தமிழ் நாடகத் துறையை வளரவிடாமல் குன்றச் செய்யும் என்பது தான் நாடகத் துறையினர் ஆரம்பத்தில் கூறிய குற்றச்சாட்டாகும். அக்குற்றத்தை எந்த வகையில் அறவே இல்லாமல் செய்யும் அளவிற்கு அல்லது, குறைக்கும் அளவிற்கு, புதிய சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதும், செய்யப்பட்டதாகக் கூறப்படும் திருத்தங்கள் நாடகத் துறையினர் கொண்டிருந்த ஆரம்பகால அச்சத்தைப் போக்கக்கூடியதாக உள்ளனவா என்பதும் சிந்திக்கத்தக்கதாகும். அப்படிப் பார்க்கின்றபொழுது, குறிப்பிட்ட எந்த ஒரு நாடகத்தையும், அதன் உரையாடல் நகலை அரசாங்க அதிகாரிகள் தணிக்கை செய்து பார்த்த பின்னரே நடிக்க அனுமதிப்பது என்னும் சட்ட ஏற்பாடு, நாடகக் கலை வளர்ச்சியைக் குன்றச் செய்யுமே அல்லாது வளர உதவும் என ஒரு நாடகத் துறையினரும் கூற முன்வரார். காங்கிரஸ் அமைச்சர்களின் 'உடன் இருத்தல்' கோட்பாட்டிற்கு ஒத்துப்போகிற நாடகத் துறையினரை, இப்புதிய சட்டம் பாதிக்காது என்பதில் நமக்கும் நம்பிக்கையுண்டு. ஆனால், ஏற்கனவே இருந்த நாடகத் துறையைக் கொல்லும் கொடிய நஞ்சு, திருத்தப்பட்ட நாடக சட்டத்திலும் அப்படியே இருக்கத்தான் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

சட்ட சபையில் உள்ள திராவிட சட்ட சபைக் கட்சியினர், மேற்படி மசோதா சட்டமாவதை எதிர்த்தார்கள் என்ற காரணத்திற்காக, நிதி அமைச்சர் முறையில்லா முறையில், திராவிடத் தனி நாடு கோரிக்கையை நாடக மசோதா எதிர்ப்புடன் இணைத்து இடர்பட்டுள்ளார். அத்தகைய இடர்பாட்டுக்குத் துளியும் இடமே கிடையாது.

திராவிடத் தனிநாடு கோரிக்கை, நிதி அமைச்சருக்கு இச்சூழ்நிலையில் பிடிக்காத ஒன்றாக இருக்கலாம். அவருக்குப் பிடித்தமான ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தையே, தமக்கிருந்த பதவி மோகத்தின் காரணமாக, தமது திருவாயினாலேயே திரும்பப் பெற்ற 'இலட்சியப் பற்று' டைய பெருந்தகைதான் நமது நிதி அமைச்சர் கனம் சுப்ரமணியம் என்பதை, நாடுஏற்கனவே ஐயத்திற்கிடமின்றி அறிந்து கொண்டு இருக்கிறது. அவருடைய மாவீரத்தையும், மனப்பாங்கையும் கண்ணாரக் கண்டு, கைகொட்டிச் சிரிக்கத் துவங்கிய திராவிடத்தார், இன்னும் அதை நிறுத்தவில்லை என்பதை அக்கனவான் அறிந்துகொள்ள வேண்டும்.

'திராவிடத்தில் 'அன்னியர்' இருக்கின்றனர்; 'அவர்கள் வெளியேற வேண்டும்' எனும் கோட்பாடு உடையவர்கள் திராவிட சட்டசபை கட்சியினர். எனவே, இந்த இலட்சியத்திற்குக் குறுக்காக நிற்கும் எந்த ஒரு சட்டத்தையும் அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள்.' இவ்வாறு, அக்கட்சியினர் எதிர்ப்பை, மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடப் பார்ப்பதுபோல், விளக்கியுள்ளார் நிதி அமைச்சர்.

காங்கிரஸ் கட்சியினருந்தான் 'வெள்ளையனே வெளியேறு' என்றனர். அதன் பொருள் என, காங்கிரஸ் தலைவர்கள், அப்பொழுது, எதைக் கூறினர்? இந்தியாவில் வெள்ளையர்கள் வைத்திருந்த அரசியல் அதிகாரத்தையும்—ஆதிக்கத்தையும் விட்டுத்தான் அவர்கள் வெளியேற வேண்டும் எனக் கோருகிறோம் என்றே, அவ்விளக்கம் இருந்தது. அதைப் போலத்தான் திராவிடத்தில் 'அன்னிய'ருக்காக அரசியல் அதிகாரமும் ஆதிக்கமும் தொலைய வேண்டுவதற்கு அவ்வாறு கூறப்படுகிறது என, ஏன் நிதி அமைச்சர் கொள்ளக் கூடாது.' நிற்க,

தனி நாடு கேட்பவர்கள், கலை உணர்வு இல்லாதவர்கள் என்பது நிதி அமைச்சர் நினைப்பா என்பது தெரிய வேண்டும். தனக்கு மட்டுந்தான் அவ்வுணர்வு இருக்கிறது —இருக்க முடியும், மற்றவர்களுக்கு இருக்காது—இருக்க முடியாது என அமைச்சர் கருதுவாரானல், அக்கருத்தை அவர் உடனடியாக மாற்றிக் கொள்ள முன்வர வேண்டும்.

தனி நாடு கேட்பவர்கள் திராவிடர்களின் நாடகத்துறையைச் சீர்குலைக்க, அதிகாரத்தில் இருப்பவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியை எதிர்த்துத் தடை செய்ய முயற்சிக்கக் கூடாது என்ற ஒரு தத்துவத்தை நிலைநிறுத்தப் பார்க்கிறாரா நிதி அமைச்சர் என்பதும் தெரிய வேண்டும்

# இந்திய சர்க்கார் நிர்வாகத்தில் எல்லாம் ஊழல்மயம்!

## தபால், தந்தி இலாகாவில் 9 லட்சம் ரூபாய் கையாடப்பட்டது!

எப்போதையும்விட இந்த ஆண்டு ஊழல் அதிகம்

## தணிக்கை குழு அறிக்கை தரும் தெளிவு

புதுடில்லி, டிச. 21—

இந்திய தபால்—தந்தி இலாகாவில் பணம் திருட்டுப்போவது, இதுவரை வேறெந்த வருடத்தைக் காட்டிலும் 1952—53-ம் ஆண்டில் அதிகமாகியிருப்பதாக இலாகா தணிக்கைக் குழுவின் அறிக்கை கூறுகிறது.

பணம் கையாடப்பட்ட சம்பவங்கள் 1,179 என்றும், மொத்தம் ரூ. 9,01,105 கையாடப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

மக்கள் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அந்த அறிக்கை கூறும் இன்னுமொரு வருந்தத் தக்க விஷயம் என்னவெனில், இந்த பணம் கையாடல் செய்யும் கேடு, இலாகாவின் எல்லா பிரிவுகளிலும் பரவி இருப்பதுதான்.

அநேகமாக எல்லா கையாடல் சம்பவங்களிலும், பணம் அல்லது 'ஸ்டாம்ப்' திருட்டுப் போயிருக்கிறது.

ரொக்க ரசீதுகள் தருதல், இன்சூர் செய்யப்பட்ட பொருள்களின் போக்குவரத்து இவைகளில் மட்டும்தான், கையாடப்பட்ட பணத்தின் அளவு குறைந்திருக்கிறது என்றாலும், கையாடல் நடைபெற்ற சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன.

இந்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களில் பெரும்பாலானோர் இலாகாவில் உள்ள தபால் அதிகாரிகள் (போஸ்ட்மாஸ்டர்கள்), உதவி அதிகாரிகள் ஆகியோரும், சிறிய கிளை தபால் அலுவலகங்களை நிர்வகிக்கும் இலாகாவைச் சேர்ந்தில்லாத அதிகாரிகளுமேயாவர்!

இவர்கள், மொத்த நஷ்டத்தில், 37 சதவிகிதமான ரூ. 3,34,000 கையாடல் செய்திருக்கின்றனர்.

கிளை தபால் அலுவலகங்களில் உள்ள 'சேமிப்பு' பாங்குகளில் தான் கையாடலில் பெரும்பகுதி நடைபெற்றிருக்கிறது.

திருட்டுக்கு யார்தான் பொறுப்பு என்ற நிர்ணயம் செய்யப்படாத சம்பவங்கள் முன்பு 237 ஆக இருந்தது; இப்போது 292 ஆக உயர்ந்துள்ளது.

சேமிப்பு பாங்குகளில் கையாடல் நடைபெற்றது ரூ. 1,84,779-ஆகும். இலாகாவைச் சேராத தபால் அதிகாரிகள் கையாடிய மொத்தத் தொகை ரூ. 33,761-என்றும் தெரிகிறது.

இனி இலாகாவில் திரும்பப் பெற முடியாது என்று கருதப்பட்ட தொகை ரூ. 1,23,991 என்றும் அறிக்கை கூறுகிறது.

## கண் கெட்ட பிறகு ஞாயிறு வணக்கமா?

"ஆட்சிப் பீடத்திலுள்ள பட்டம் தாணுவின் மந்திரி சபைக்கு, இனிமேல் தமது கட்சி ஆதரவு கொடுக்கப் போவதில்லை" என்று, திரு-கொச்சி சட்ட சபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் பனம்பள்ளி கோவிந்த மேனன், திரு—கொச்சி ராஜப்பிரமுகருக்குக் கடிதம் எழுதிவிட்டாராம்.

தனி நாடு இலட்சியம் நிறைவேற அமைச்சர் கூற்றுப்படி காலஞ்செல்லும் என்ற காரணத்திற்காக, காங்கிரஸ் ஆளவந்தார்களால் இழைக்கப்படும் கேடுகளிலிருந்து, சொந்த இன மக்களையும், அவர் தம் கலையையும் காப்பாற்றும் உரிமையும், கடமையும் அந்த இலட்சியத்தைக் கொண்டுள்ள மக்களுக்குக் கிடையாது—இருக்கக் கூடாது என நிதி அமைச்சர் எண்ணுகிறார் போலும்! அந்தோ பரிதாபம்! நிதிஅமைச்சர் போக்கு, 'ஊமைக்கு உளறுவாயன் மேல்' என்ற மொழியைத்தான் நினைவுபடுத்துவதாக இருக்கிறது!

## தியாகம் செய்தால்தான்...

ஒரு கோடி 20 லட்சம் பேருக்கு வேலை அளிக்க முடியுமாம்!

"எல்லா தரப்பினரும் தேவையான அளவு தியாகம் செய்தால்தான் 1கோடி 20லட்சம் பேருக்கு வேலை கொடுப்பதென்பது சாத்தியமானதாகும். எல்லோருக்குமே வேலை கொடுப்பதென்றால் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டுவிடும். தியாகம் சமமாக இருக்கும்படி சர்க்கார் பார்த்துக்கொள்ள வேண்டியது கடமையாகும்."

இவ்வாறு, சர்க்காரின் பொருளாதாரக் கொள்கை பற்றி மக்கள் சபையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மத்திய வர்த்தக, கைத் தொழிலமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி குறிப்பிட்டிருக்கிறார்.

## பீடித் தொழில்

சர்க்காருக்குத் தரும் வருமானம் பற்றிய குறிப்புகள்

சென்னை சட்ட சபையில், பீடித் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச கூலி விகிதம்பற்றி விவாதம் நடைபெற்றபோது கே. பி. கோபாலன் என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர் கூறியதாவது :—

"மாநிலத்தில் ஏறத்தாழ 3,50,000 பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; இந்தத் தொழில் கைத்தறித் தொழிலுக்கடுத்த பெரிய தொழிலாகும்.

"மாநிலத்தில் தினம் மொத்தம் 35 கோடி பீடி புகைக்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் 'எக்சைஸ்' வரி மூலமாக ஆண்டு தோறும் ரூ. 32 கோடி வருமானம் பெறுகிறது.

"பீடி வியாபாரிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் அனுமதிக் கட்டணம் ரூ. 2-ம், தொழில் வரி ரூ. 10-ம், மாநில அரசாங்கம் வசூலிக்கிறது.

"இதனால் இத்தொழில் அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் தரும் தொழிலாயிருக்கிறது.

"பீடித் தொழிலாளருக்கு சர்க்கார் நிர்ணயித்துள்ள 1,000 பீடிக்கு ரூ 1—4—3; 1,000 சுருட்டுக்கு ரூ. 2—4—0-என்ற குறைந்தபட்ச கூலி விகிதத்தை முறையே ரூ. 2—4—0 ஆகவும், ரூ. 3 ஆகவும் திருத்தியமைக்க வேண்டும்."

மற்றும் பல எதிர்க் கட்சியினரும் இதை ஆதரித்துப் பேசினர்.

அரசாங்கம் கூலி உயர்வு பற்றி மீண்டும் ஆலோசிக்கும் என்று கூறி மந்திரி பக்தவத்சலம் விவாதத்தினை முடித்தார்.

# தலைமன்னரில் 'காவல் கைதிகள்' உண்ணாவிரதம்!

## கால வரையபரையின்றி காவலில் வைக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு

கோழும்பு, டிச. 21—

தலைமன்னரில் உள்ள 73 காவற் கைதிகள், காலவரையறையின்றி தாங்கள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து உண்ணாவிரதம் மேற்கோண்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

இவர்கள் எல்லோரும் கள்ளத்தனமாக இலங்கை வந்தவர்கள் எனவும், இவர்களுக்கு பிரயாண வசதிகள் தரப்பட்டுவிட்டால் இவர்களை இந்தியாவுக்கு அனுப்பிவிட முடியுமென்றும், இதற்கான தஸ்தாவேஜுகள் தராமலிருப்பது இந்தியத் தூதுவராலயம்தான் என்றும் இலங்கை சர்க்கார் சார்பில் சொல்லப்படுகிறது.

இந்தியத் தூதுவராலயச் சார்பில் கடந்த டிசம்பர் 2-ந் தேதியன்று தலைமன்னரில் 68 காவற் கைதிகள் இருந்தனரென்றும், இவர்களில் 32 பேர் பற்றிய விபரங்கள் இன்னமும் இலங்கை அரசாங்கத்துடன் விசாரணையிலிருப்பதாகவும், ஆறு பேர்கள் பற்றிய விபரங்கள் இன்னமும் இலங்கை சர்க்காரிடமிருந்து வரவில்லையென்றும் கூறப்படுவதுடன், எஞ்சியுள்ள 30 பேர்களுக்கான பிரயாண தஸ்தாவேஜுகள் தயாராக இருந்தபோதிலும் அவை உடனடியாக அனுப்ப முடியாமலிருப்பதற்குக் காரணம் அந்த 30 பேர்களில் இருவர் மீது ஏதோ வழக்கு இருப்பதால், அவர்கள் 30-ந் தேதியன்று வழக்கு விசாரிக்கப்படும் வரை தலைமன்னரில் இருந்து தீரவேண்டியுள்ளதாயும் சொல்லப்படுகிறது.

எது எப்படியாயினும் கள்ளத்தனமாக வந்தவர்கள் திருப்பி அனுப்பப்படுவதில் இந்தியத் தூதுவராலயம் அசிரத்தையாயிருப்பதாக இலங்கை சர்க்கார் கூறுகிறது.

இந்தப் போக்கினால் ஆங்குள்ள 73 பேர்களும் நேற்று முதல் உண்ணுவதில்லை என்ற முடிவை மேற்கொண்டிருக்கின்றனராம்.

# சுகர்ணோவின் இரகசியத் திருமணம்

## இரண்டாவது மனைவியுடன் இரண்டாவதாக நடைபெற்றது

"இந்தோனேஷ்யாவின் ஜனாதிபதி சுகர்ணோவுக்கும் அவரது இரண்டாவது மனைவிக்கும் இரண்டாவது முறையாக திருமணம் நடைபெற்றது; முதலில் இவர்களுக்கிடையே நடைபெற்ற திருமணத்தில் சட்டப்படி சில ஆட்சேபனைகள் இருந்ததால், மீண்டும் இத்திருமணம் இரகசியமாக நடைபெற்றது," என்று ஜகார்தா பத்திரிகைகள் தெரிவித்தன.

31 வயதுடைய ஹார்தினி என்னும் பெண்மணிதான் அவருடைய இரண்டாவது மனைவி; இப்பெண்மணி, தன் முன்னைய கணவருடன் விவாக ரத்து செய்துகொண்ட மூன்று மாத காலத்திற்குள், இந்தோனேஷ்ய ஜனாதிபதியை மணந்து கொண்டது பற்றி முஸ்லிம் மதவாதிகள் ஆட்சேபனை செய்தார்களாம். இதன் காரணமாகவே மீண்டும் திருமணம் நடைபெற்றது என்று சொல்லப்படுகிறது.

இப்பெண்மணிக்கு அடுத்த ஆண்டில் குழந்தை ஒன்று பிறக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது மனைவியான இவர், சுகர்ணோவின் முதல் மனைவியை பார்ப்பதும் கிடையாதாம். முதல் மனைவியான பாத்மாஜதி என்பவருக்கு ஐந்து குழந்தைகள் உண்டு என்று தெரிகிறது.

சென்ற ஜூன் திங்களில், சுகர்ணோ—ஹார்தினி திருமணம் நடைபெற்றபோது, இந்தோனேஷ்யாவின் பெண்கள் அமைப்பான 'பெர்வாரி' இத்திருமணத்தைக் கண்டித்தது பொதுமக்களுக்கு நினைவிருக்கலாம்.

# ஆத்தூரில் கூட்டுறவுப் பண்ணை

சேலம், டிச. 21—

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் உள்ள ராமநாய்க்கன் பாளையத்தில் கூட்டுறவுப் பண்ணை சங்கம் ஒன்று நிறுவ திட்டம் உருவாகியுள்ளது.

மாநிலத்திலேயே முதன் முதலாகத் துவங்கும் இந்த கூட்டுறவுப் பண்ணை 572 ஏகர் பரப்புள்ள நிலத்தில் துவங்கும்; சுமார் 50 குடும்பங்கள் அந்தப் பண்ணையில் குடியேற்றப்படும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கும், அருகாமையில் வசிப்பவர்களுக்கும் சலுகைகள் தரப்படும் என்று தெரிகிறது.

சுமார் ரூ. 3.7 லட்சம் மதிப்பீட்டில் உருவாகும் இந்தப் பண்ணையில், விவசாயம் மட்டுமின்றி ஆடு வளர்க்கும் பண்ணை, பால் பண்ணை முதலியனவும் நடத்தப்படும் என்றும் தெரிகிறது.

வீடு கட்டுவதற்காகவும், இதர வசதிகளுக்காகவும் 1·7 லட்சம் செலவாகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளதாம். வீடுகள், பாதி மானியம்—பாதி கடன் என்ற விகிதத்தில் குடியானவர்களுக்குக் கட்டித்தரப்படுமாம்.

10 ஏகர் உள்ள ஒரு பிரிவுக்கு ஒரு கிணறு வீதமும், 100 ஏகர் பரப்புள்ள பிரிவுக்கு ஒரு 'பம்ப்' செட்டும் அமைத்துத் தரப்படும் எனவும் தெரிகிறது.

ஒரு கூட்டுறவு உதவி ரிஜிஸ்திரார், விவசாய இலாகா அதிகாரி ஆகியோரின் மேற்பார்வையில் பண்ணை இயங்குமெனவும், இதற்கான திட்டம் மாநில கூட்டுறவு இலாகா அதிகாரியின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

இந்திய-அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஏற்பாட்டின் கீழ் அமெரிக்க சர்க்காரின் பங்கு சுமார் 18·14 கோடி டாலராகும்.

# காமராசரிடம் மாணவர்கள் முறையீடு

## முதலமைச்சரின் உறுதிமொழி

ஆந்திராவிலுள்ள அனந்தப்பூரில் எஞ்சினீயரிங் கல்லூரியில் தற்போது பயிற்சி பெற்றுவரும் மாணவர்கள் யாவரையும் தமிழ் நாட்டிலுள்ள எஞ்சினீயரிங் கல்லூரிகளுக்கு மாற்றும்படியும், அப்படி மாற்றப்பட்டால்தான், அம்மாணவர் நிலையான, சுதந்திரமான ஒரு சூழ்நிலையில் கல்வி பயில இயலும் என்றும், சென்னை முதலமைச்சர் காமராசரை, மாணவர்களின் தூதுக் குழு ஒன்று சந்தித்துக் கூறியிருக்கிறது. முதலமைச்சர், கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாக வாக்குறுதி கூறியதோடு, சென்னை கிண்டியிலும், கோயம்புத்தூரிலும் உள்ள எஞ்சினீயரிங் கல்லூரிகளில் அம்மாணவர்களை. பொறுப்பேதுமில்லாத வகையில் சேர்த்துக்கொள்வது பற்றித் தாம் கவனிப்பதாகவும் கூறியிருக்கிறார்,

## அதற்கு மட்டுமென்ன விதிவிலக்கா?

குடந்தை, டிச. 21—

மலேயா, விருதுநகர் ஆகிய இடங்களிலிருந்து இங்கு வரும் கொட்டைப் பாக்கு, மற்றும் சீவல் இவற்றில் கூந்தல் பனை, அல்லது திப்பிலிப் பனை இவைகள் கலப்படம் செய்யப்படுவதாகப் புகார் வந்துள்ளதாகத் தெரிகிறது.

உணவுப் பொருளில் கலப்படம் செய்வது எப்படிக் குற்றமோ, அதே போன்ற இந்தக் கொட்டைப் பாக்கு விஷயத்திலும் கலப்படம் குற்றமானது என்றே கருதப்பட்டு, உத்திரவு பிறப்பிக்குமாறு மாநில சுகாதார அதிகாரிக்கு, நகரசபை சுகாதார அதிகாரி கடிதம் வரைந்துள்ளாராம்.

கலப்படம் செய்யப்படாத கொட்டைப் பாக்கு மணங்கு ஒன்றுக்கு ரூ. 31 ஆக விற்கும்போது; கலப்படப் பாக்கு ரூ. 9-க்கு மட்டும் கிடைக்கிறதென்றும், இதிலிருந்தே கலப்படம் எவ்வளவு அதிகமான அளவு செய்யப்படுகிறதென்று தெரிய முடியுமென்றும் சொல்லப்படுகிறது.

1954–55-ம் ஆண்டில், பஞ்சாப் சர்க்காருக்கு, சாந்திகர் தலைநகர நிர்மாணத் திட்டத்துக்காக, மத்திய சர்க்கார் ரூ. 125 இலட்சம் கடனுதவி அளிக்கச் சம்மதித்துள்ளனர்.

# கிராம மக்களுக்கு கடன் வசதி

கிராமங்களில் உள்ள மக்கட்கு கடன் வசதியை அதிகரிக்கச் செய்ய சர்க்கார் உதவியுடன் கூட்டுறவு நிறுவனங்களை பலப்படுத்தவும், விவசாயப் பண்டங்கள் மார்க்கெட் வசதி நிறுவனங்கள் ஏற்படுத்தவும், ரிசர்வ் பாங்கியினால் அமைக்கப்பட்ட குழு, சில சிபாரிசுகள் செய்துள்ளது. அக்குழு, அகில இந்திய கிராமக் கடன் வசதி பற்றி 'சர்வே' செய்து அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

## துறைமுகத் தொழிலாளர் வேலை ஒழுங்கு திட்டம்

### பரிசீலனை செய்ய குழு நியமனம்

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய துறைமுகத் தொழிலாளிகள் வேலை, ஒழுங்குபாடு திட்டம் ஆகியவை எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை பரிசீலிக்க, இந்திய சர்க்கார், குழு ஒன்றை நியமிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், அக்குழுவில், தொழிலாளிகள், முதலாளிகள் ஆகிய இரண்டு தரப்பினரும் இடம் பெறுவர் எனவும் கூறப்படுகிறது.

## மலையேறியவர்கள் சறுக்கி விழுந்து மாண்ட பரிதாபம்

பிரிட்டனில் உள்ள மிக உயரமான மலை உச்சி ஒன்றில் ஏற முயன்ற கப்பற் படையைச் சேர்ந்த ஐவர் (ஒரு பெண் உள்பட) மலை மீதிருந்து சறுக்கி விழுந்து இறந்தனர் எனத் தெரிகிறது.

பென் எற்விஸ் என்ற 4,406 அடி உயரமுள்ள மலையில் கப்பற் படையைச் சேர்ந்த பதினேரு பேர்களடங்கிய குழு ஒன்று ஏறியது; ஆனால், அவர்கள் உச்சியை அடைந்து கொண்டிருக்கையில் அவர்களில் ஐவர் சறுக்கி 1,000 அடி தாழ்வாகவுள்ள படுபாதாளத்தில் விழுந்து இறந்துவிட்டனர் எனத் தெரிகிறது.

பென் எற்விஸ்தான் பிரிட்டனின் மிக உயரமான மலைச்சிகரம்; அது ஸ்காட்லாந்தில் உள்ள இன்வெர்னஸ் எனும் இடத்திலுள்ளது.

இந்தியாவுக்கு இவ்வாண்டு வந்துள்ள அயல்நாட்டு உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை, 1953ம் வருடத்திய எண்ணிக்கையைக் காட்டிலும் 35 சதவிகிதம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சமாதான வாழ்வு: டிட்டோ கருத்து

## ஐ. நா. சபையில் உள்ள ஒரே குறைபற்றி வருத்தம்

புதுடில்லி, டிச. 21—

"யூகோஸ்லேவியா எந்த ஒரு வல்லரசு கோஷ்டியுடனும் சேராது; தனது சொந்தமான தேசீயக் கொள்கையையே பின்பற்றும்; யூகோ சேர்ந்து வாழும் கொள்கையில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளது,"

இவ்வாறு, மார்ஷல் டிட்டோ, இந்திய மக்கள் சபை, மேல் சபை உறுப்பினர்களடங்கிய கூட்டுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமது நீண்ட உரையில் அடிக்கடி சமாதான முறையில் சேர்ந்து வாழ்வதின் சாத்தியம் பற்றிப் பேசிய அவர், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் அவர் நம்பிக்கை தெரிவித்ததுடன், உலகில் உள்ள எல்லா நாடுகளையும் அங்கத்தினர்களாக ஐ. நா. சபை சேர்த்துக் கொள்ளாதது வருந்தத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

ஐ. நா. நிறுவனத்தில் உள்ள ஒரே ஒரு குறை அதுதான் என்றும், இதனால்தான் உலகத்தை இரு முகாம்களாகப் பிரிப்பது அங்கேயே பிரதிபலிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## பலத்த எதிர்ப்பு!

ஆசிய நாடுகளுக்கு மிகப் பெரும் அளவில் நிதி உதவி செய்வதற்காக, அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவரின் ஆலோசகர்கள் தயாரித்த திட்டங்களுக்கு, அமெரிக்கக் காங்கிரசிலும், மந்திரி சபையிலும் பலத்த எதிர்ப்புகள் காணப்படுகின்றனவாம்.

## அங்கீகரித்துவிட்டது!

லாவோஸ், கம்போடியா சர்க்கார்களை சட்டமுறைப்படி அங்கீகரித்து விடுவதென செய்துள்ள ஒரு முடிவை, பாகிஸ்தான் சர்க்கார் அறிவித்துவிட்டிருக்கிறது.

வியட்னும், வியட்மின் சர்க்கார்களை செயல் முறையில் அங்கீகரிப்பதென்றும், அவைகளுடன் வெகு விரைவிலேயே ராஜீய உறவு ஏற்படுத்திக்கொள்ளும் என்றும் பாக். சர்க்கார் மேலும் அறிவித்துள்ளது.

## ஆபத்து நீங்கவில்லை?

சென்ற ஆண்டில் அமெரிக்கர்கள் நடத்திய நீர்வளிக் குண்டு பரிசோதனைகளின் விளைவாக, பிக்கினித் தீவைச் சுற்றிலுமுள்ள கடல் நீரில் இன்னும் ரேடியக் கதிர் இயக்கம் இருந்து வருவதாகவும், இதனால், கடலில் மீன் பிடிப்பது இன்னும் ஆபத்தான வேலையாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## 'புத்தர் சரித்திரம்' சொற்பொழிவு

திருவனந்தபுரம், தம்பானூர் ஆண்டாள் மண்டபத்தில், 17—12—54 இரவு 8 மணிக்கு, தோழர் டி. கே. கங்காதரன் 'புத்தர் சரித்திரம்' பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். சொற்பொழிவை மங்கலானந்தர் ஆரம்பித்துவைத்தார். ஜான் ஸ்பியேர்ஸ் (ஆஸ்திரேலியர்), தோழியர் கமலாபாய் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## அனுதாபம்

"தோழர் ஏ. முருகேசன் பெண் குழந்தை, தோழர்கள் சீராமுலு—செங்கல்ராயன் தந்தை கோதண்டராமன், தோழர் மு. சின்னசாமி தாயார் அம்மாகண்ணம்மாள் ஆகியோர் இயற்கை யெய்தியமைக்கு கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று பெங்களூர்—அக்கிப்பேட்டை தி. மு. கழகத்துணைச் செயலாளர் தோழர் சி. உலகநாதன் அறிவிக்கிறார்.


# கர்நாடக தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

## பெங்களூர் கண்டோன்மெண்ட் பிளாக்பள்ளி மைதானத்தில், மஜீத் பந்தலில் கைலாசம் அரங்கில் நடைபெறும்

| 1—1—55 சனி: | 2—1—55 ஞாயிறு: |
|---|---|
| **சமூக சீர்திருத்த மாநாடு** | **அரசியல் மாநாடு** |
| தலைவர்: காஞ்சி கல்யாணசுந்தரம் | தலைவர்: என். வி. நடராசன் |
| திறப்பாளர்: ப. உ. சண்முகம் | திறப்பாளர்: தோழியர் அருண்மொழி |

இரண்டு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனர், கே. ஆர். ராமசாமி மற்றும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்

★

இசைமுரசு நாகூர் அனீபா குழுவினரின் இசை விருந்து உண்டு

**2-1-55 பிற்பகல் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால்**

"நான் கண்ட ரஷ்யா" வில்லுப்பாட்டு நடைபெறும்

மாநாட்டுக் கட்டணம் (இரண்டு நாட்களுக்கும்):

வரவேற்பாளர் ரூ. 3, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1, பெண்கள் அணு 8

| வ. கு. தலைவர்கள்: | செயலாளர்கள்: | பொருளாளர்: |
|---|---|---|
| எஸ். ஜே. உசேன், எஸ். வி. பதி | ஏ. டி. பிரான்சிஸ், செ. விழியன் | எம். ஆர். பெருமாள் |

விளம்பரக் குழு: கி. சோழன், வெங்கடசாமி தொ. ப. தலைவர்: ஆர். ராகவன் துணை: சு. கண்ணன்

REGD. No. 6311

# அரிசி தேங்கியதில் சென்னைக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம்?

## நஷ்டத்தில் பங்கு கொள்ள மத்திய அரசாங்கத்திடம் முறையீடாம்!

சென்னை மாநிலத்தில் கடந்த ஜூலை 13-ந் தேதிய கணக்குப்படி 1,45,472 டன் அரிசி தேங்கிவிட்டதில் 1,10,000 டன் அரிசியை மத்திய அரசாங்கத்திடம் ஒப்புவித்துவிட முடிவு செய்திருப்பதாயும், எஞ்சியுள்ள 24,000 டன் அரிசியை 'டெண்டர்' கோரி விற்றுவிட முடிவு செய்திருப்பதாயும் மந்திரி பக்தவத்சலம் மேல் சபையில் தெரிவித்திருக்கிறார்.

எஞ்சியுள்ள 24,000 டன் அரிசியில் பெரும் பகுதி ஏற்கனவே விற்பனை செய்தாகிவிட்டதென்றும், மிகுதியையும் சீக்கிரமே விற்றுவிடலாமெனவும் அவர் கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவரான டாக்டர் ஜான், "அரிசி தேங்கிவிட்டதினால் கெட்டுப்போய் சர்க்காருக்கு பல கோடி ரூபாய் நஷ்டம் வந்திருக்கக் கூடுமாதலால், இனியாவது சர்க்கார் இந்த வியாபாரத்தை மேற்கொள்ளாமலிருப்பார்களா?" என்று கேட்டார்.

மந்திரி பக்தவத்சலம் பதிலளிக்கையில், நஷ்டமேற்பட்டிருப்பதை, மத்திய அரசாங்கமும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென சென்னை அரசாங்கம் கோரி இருப்பதாகவும், ஆனாலும், நெருக்கடி நேரங்களில் தேவைகளைச் சமாளிக்க அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் வியாபாரம் செய்வதில் சர்க்கார் ஈடுபடவேண்டியிருக்கிறதென்றும் கூறியிருக்கிறார்.

## விலைவாசிகள் சரிகின்றனவா?

நெல், கோதுமை போன்ற விவசாயப் பொருள்களின் விலைகள் குறைந்து வருகின்றன; ஆனால் அதே நேரத்தில், வெளிநாடுகளிலிருந்து அவைகள் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இதைத் தடுக்க சர்க்கார் செய்துள்ளதென்ன?" — இவ்வாறு, சென்னை சட்டசபையில் உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் விவசாய மந்திரி கூறியதாவது :—

"விவசாயப் பொருட்களின் விலைகள் சாதாரண நிலையிலிருந்து குறைந்துவிடாமல் தடுக்கின்ற விஷயம் யாவும் இந்திய சர்க்காரின் பரிசீலனையிலிருக்கிறது," என்றார்.

## வெல்லம் விலை சரிவு

### சர்க்கார் கவலை?

சென்னை, டிச. 23—

நெல், அரிசி இவை போன்றே வெல்லத்தின் விலையும் சரிந்து வருவதைத் தடுக்க சர்க்கார் யோசித்து வருவதாகத்தெரிகிறது. இதற்குப் பரிகாரம், இப்போது ஏற்றுமதி செய்வதற்கென அனுமதிக்கப்பட்டிருக்கும் அளவான 2000 டன்னை இன்னும் அதிகப்படுத்துவதென்றும், சர்க்கரை ஆலைகளுக்கு அதிகமான கரும்புகளைக் கொடுத்து சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதோடு வெல்ல உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென்பதுதான் என்றும் சர்க்கார் வட்டாரங்களில் கருதப்படுகின்றனவாம்.

கரும்பு போக்கு வரத்து பற்றிய தொல்லைகள் தற்போது இல்லை என்றும், இரயில்களில் கரும்பு களவாடப்படுவது போலீஸ் உதவி கொண்டு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது என்றும், இது போன்றே உருளைக் கிழங்கு போக்குவரத்து சம்மந்தமாக இருந்துவந்த தொல்லைகளும் இப்போது இல்லையென்றும் கூறப்படுகிறது.

* * *

அமைச்சரிடம் தூதுக் குழு

திண்டுக்கல் ஒவ்வொரிக் வர்த்தக சபை சார்பில் தூதுக்குழு ஒன்று விவசாய அமைச்சரைச் சந்தித்து தமிழ் நாட்டில் வெல்லம், நாட்டுச் சர்க்கரை, வெங்காயம், மிளகாய் போன்ற பொருள்கள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கின்றன என்றும், அப்பொருட்களின் விலை தற்போது ஒரேயடியாகச் சரிந்துவிட்டன என்றும், இதைப் போக்க இப்பொருட்களை மற்ற மாநிலங்கட்கு ஏற்றுமதி செய்ய சர்க்கார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு உற்பத்தியாளருக்கு உதவ வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

வட நாட்டிலிருந்து வருகின்ற வெல்லம் மணங்கொன்று ரூ. 5 முதல் 6 வரை விற்கப்படுவதாகவும், ஆனால் அதே நேரத்தில் தென்னாட்டில் உற்பத்தியாகின்ற வெல்லமோ ரூ. 7½ யிலிருந்து ரூ. 9½ வரையிலும் அதிகமாக விற்கப்படுவதும் எடுத்துக்காட்டப்பட்டது. பல மாவட்டங்களிலுமாக மொத்தம் சுமார் 70,000 டன்னுக்கு மேற்பட்ட வெல்லம் தேங்கிக் கிடப்பதாகவும், இதைப் போக்க சர்க்கார் உடனடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. நிலைமைகளைக் கவனித்து ஆவன செய்வதாக நிதியமைச்சர் வாக்களித்திருக்கிறாராம்.

* * *

டில்லிக்கு தே. இ. வர்த்தக சபையினர் தந்தி

சென்னை மாநிலத்தில் ஏராளமான வெல்லம் உபரியாகத் தேங்கிக் கிடக்கிறதென்றும், சென்னையிலிருந்து குறைந்தது 10,000-டன் வெல்லமாவது உடனடியாக ஏற்றுமதி செய்ய அனுமதி கேட்டுக்கொண்டும், தென் இந்திய வர்த்தக சபை மத்திய வர்த்தக உதவியமைச்சருக்குத் தந்தியொன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது.

## புஞ்சை பயிர்கள்

### உற்பத்தி பாதிக்கப்படுமா?

அரிசி விலை சரிந்துவிடாமல் நடவடிக்கை எடுக்கப்படும்?

சென்னை மாநில நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், பத்திரிகை நிருபர்களிடை பேசுகையில், "புஞ்சைத் தானியங்களின் விலை ஒரேயடியாகக் குறைந்துவருவதைத் தடுக்க, அவற்றை மார்க்கெட்டில் சர்க்காரே வாங்குவதற்கு மத்திய சர்க்கார் உத்தேசித்திருப்பது பற்றி சென்னை சர்க்காருக்கு இதுவரை ஒரு தகவலும் கிடையாது; ஆனால், சென்னை மாநிலத்தில் புஞ்சைத் தானியங்களின் உற்பத்தி அதிகமில்லாததால், இங்கே இது பெரியதொரு பிரச்சினையாகவில்லை: மேலும், இங்கு காலந்தவறி மழை பெய்திருப்பதின் காரணமாகப் புஞ்சைப் பயிர்கள் உற்பத்தி அநேகமாக பாதிக்கப்பட்டாலும் படலாம்" என்று கூறியிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், நெல், அரிசி விலைகள் சரிந்துவிடாதபடி நடவடிக்கைகள் எடுக்க சர்க்கார், அவசியப்படுகிறபோது பரிசீலனை செய்யுமென்றும், தற்போது அவற்றின் விலை அளவுக்கு மீறி குறைந்துவிடவில்லை என்றும், அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் புது மகசூல் ஆன பிறகே நிலைமையை நிதானிக்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.

## விறகு விலை ஏற்றம்

### சென்னை சர்க்கார் கவலை?

சென்னை நகரம் போன்ற இதர இடங்களில் விறகு விலை படிப்படியாக ஏறிக்கொண்டே வருகிறது. இது விஷயத்தை சென்னை சர்க்கார் கவலையெடுத்துக் கவனித்து வருவதாகவும், கடப்பை முதலிய இடங்களிலிருந்து அதிக அளவு விறகு கொண்டுவர போதுமான அளவு போக்குவரத்து வசதி செய்து தருவது சம்பந்தமாக சென்னை சர்க்கார், இரயில்வே அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளதாயும் கூறப்படுகிறது.

சர்க்கார் காடுகளிலிருந்து விறகு வினியோகம் செய்யலாம் என்று யோசனையொன்று இருந்துவருவதாயும், ஆனால், 'கண்ட்ரோல்' இல்லாதபோது இத்தகையதொரு புதிய 'கண்ட்ரோலை' ஏற்படுத்துவது நல்லதா என்ற கேள்விகள் எழும்புவதாகவும் மேலும் கூறப்படுகிறது.

## விவசாயக்கடன் வாய்தா சட்டம்

### சென்னை மேல் சபை முடிவு

விவசாயக் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தை அடுத்த ஆண்டு பிப்ரவரி திங்கள் இறுதிவரை நீடிக்க வேண்டுமென்று பிரரேபித்து, ரெவினியூ அமைச்சர் சென்னை சட்ட (மேல்) சபையில் பேசும்போது, இருக்கின்ற மசோதாவை மேலும் மூன்று வார காலத்திற்கு மட்டும்தான் நீடிப்பதே நோக்கமென்றும், இதுபற்றி, பின்னர், விரிவான மசோதா வருகின்றபோது உறுப்பினர்கள் விரிவாகப் பேசலாமென்றும் குறிப்பிட்டார். (இம்மசோதாவை ஏற்கனவேகீழ் சபை நிறைவேற்றிவிட்டது.)

விவாதத்திற்குப் பின்னர் மசோதா நிறைவேற்றப்பட்டது.

## பயிர்களுக்கு நோய் ஏதும் இல்லை?

சென்னை, டிச. 23—

இவ்வாண்டில், தஞ்சை மாவட்டத்தில் பயிர்கட்குப் பெருமளவில் நோய் ஏதும் காணவில்லை யென்றும், இதற்கு முன்னர் செய்து வந்துள்ளதைப் போன்றே இவ்வாண்டிலும் பூச்சிகளை அழிக்கும் மருந்துகளைச் சலுகையான விலைக்கு விற்க சர்க்கார் உத்திரவிட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனராம்.

## முக்கூட்டு கமிட்டி

### நியமிக்க இயலாதென சர்க்கார் அறிவிப்பு

"வேலைப் பளுவை நிர்ணயிக்கவும், கிராக்கிப்படி அல்லது 'அலவன்சை' முடிவு கட்டவும், தகராறுகள் எழுகின்றபோது. அவைகளைப் பைசல் செய்து கொள்ளவுமாக மூன்று 'பிராந்திய முக்கூட்டுக் கமிட்டி'கள் நியமிக்கப்படவேண்டும்," என்று, சர்க்காரால் ஏற்கனவே நியமிக்கப்பட்ட முக்கூட்டுக் கமிட்டி, சிபாரிசு ஒன்றைச் செய்துள்ளது.

ஆனால், குழுவின் இச்சிபாரிசுகளை ஏற்க மறுத்து, "பஞ்சாலைத் தொழிலுக்கென கோவை, மதுரை, சென்னை ஆகியஒவ்வொரு இடங்களுக்கும், சர்க்கார், முதலாளிகள், தொழிலாளிகள் ஆகியோர் பிரதிநிதிகள் கொண்ட 'பிராந்திய முக்கூட்டுக் கமிட்டியை' நியமிக்கப் போவதில்லை," என்று கூறி, சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

## தாராளம்?

"அமைதியான முறையில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றால் சர்க்கார் அவற்றை அனுமதிக்கும்," என்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறினார். இதை நிச்சயிக்கும் முறையில், 'சமீபத்தில் பிரதமர் நேரு சென்னை வந்திருக்கையில் நடைபெற்ற கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் அனுமதிக்கப்பட்டதே' என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்!

## மதுரை நகர் தி.மு.கழக

### செயற்குழு உறுப்பினர்கட்கு

மதுரை நகர் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் **25-12-54** இரவு **10** மணிக்கு மதுரை நகர் கழக அலுவலகத்தில் நடைபெறும்.

பொருள் : மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டு வேலை.

## கழகக் கூட்டங்கள்

★

சின்னாளப்பட்டி

தி. மு. கழக கட்டிடத் திறப்புவிழாவும், பொதுக்கூட்டமும்

வள்ளுவர் திடலில்

**24—12—54** மாலை **6** மணிக்கு

தலைவர்: வி. எஸ். எஸ். மணி

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

கே. ஏ. மதியழகன்

அ. பொன்னம்பலனார்

★

திண்டுக்கல்

வ. உ. சி. திடலில்

**25—12—54** மாலை **6** மணிக்கு

தலைவர் : அ. பொன்னம்பலனார்

பேசுவோர் :

சி. என். அண்ணாதுரை

கே. ஏ. மதியழகன்

பி. சமதர்மம்

எஸ். பி. தாண்டவன்

அன்று மாலை தோழர் கே. எம் அனிபா குழுவினரின் இன்னிசையும் நடைபெறும்.

★

கோவை

ஒய். எம். சி. ஏ. திடலில்

**25—12—54** மாலை **6** மணிக்கு

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்

எம். பி. சுப்பிரமணியம்

★

பாப்பம்பட்டி (பழனி)

அழகிரி திடலில்

**25-12-54** மாலை **6-30** மணிக்கு

தலைவர் : உடுமலையான்

பேசுபவர்:

க. அன்பழகன்

★

இடையகோட்டை

தி. மு. கழக முதலாண்டு விழா

குமாரமுத்து படித்துரையில்

**26—12—54** மாலை **4** மணிக்கு

தலைவர்: கே.எஸ். இலட்சுமிபதி. எம்.எல்.ஏ,

பேசுவோர் :

சி. என். அண்ணாதுரை

கே. ஏ. மதியழகன்

அ. பொன்னம்பலனார்

மதுரை எஸ். முத்து

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

டி. சண்முகம், ,,

சுயம்பிரகாசம், ,,

எம். பி. சுப்ரமணியம், ,,

கே. ஏ. சேனாபதி, ,,

ஏ.கோபால கவுண்டர், ,,

ஆர். ரங்கசாமி ரெட்டியார், ,,

எம். பி. மங்கலம், ,,

என். இரத்தினம், ,,

மாலை 3 மணிக்கு, மாபெரும் ஊர் வலமும், தோழர் நாகூர் அனிபா இசை விருந்தும், கிராமிய மேளம்—கிராமிய நாடகமும் நடைபெறும்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

24-12-54 மாலை 6-30 மணிக்கு சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் இரா. வேங்கடன் தலைமையில் 'எழுச்சியின் வளர்ச்சி' என்னும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

### முன்னணிக் கழகம்

24-12-54 மாலை 6 மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி, எண் 9, சுப்பராயச் செட்டி தெருவில் தோழர் இரா. இளந்திரையன் தலைமையில் குறள் பற்றி பலர் பேசுவர்.

## நிதி மந்திரிக்கு பயமுறுத்தல் கடிதங்கள்!

சென்னை நிதி மந்திரி நாடகத் தடைச் சட்ட மசோதா கொண்டு வந்ததிலிருந்து அவருக்கு பல பயமுறுத்தல் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றனவாம்.

"கலை, இலக்கிய வளர்ச்சியின் முன்னேற்றத்தைத் தடுக்கும் மசோதாவைக் கைவிடுக," என்று ஒரு கடிதம் வந்துள்ளதாம்.

சிவப்பு மையினால் எழுதப்பட்டிருக்கும் அந்தக் கடிதத்தில் மேலும் கண்டிருப்பதாவது :—

"இராஜகோபாலாச்சாரியார் கொண்டுவந்த புதிய கல்வித் திட்டக் கொள்கையில், நீரும் அவரைப் பின்பற்றி தோல்வி கண்டீர்; மூக்குடை பட்டீர்; இப்போது நாடகச் சட்டத்தைக் கொண்டு வருகிறீர். பர்மாவில் சுட்டுக் கொல்லப்பட்ட ஏழு மந்திரிகளின் கதியை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்; கோட்சேக்கள் தயாராக இருக்கின்றனர்; காமராச நாடார் காப்பாற்றப்படுவார்—பாதுகாக்கப்படுவார்; எச்சரிக்கையாயிருங்கள்; நாடகச் சட்டத்தைக் கைவிடுங்கள்," என்று எழுதப்பட்டுள்ள அக்கடிதத்தின் கீழ், "இந்தியக் குடிமகன்" என்று கையொப்பமிடப்பட்டுள்ளதாம்!

## போட்டிச் சங்கங்களிடை கைகலப்பு

### இரு தொழிலாளர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்

கோட்டயம் தோட்டத் தொழிலாளர்களிடையே ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக இருவர் காயங்களுடன் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் எனத் தெரிகிறது.

அவர்களில் ஒருவர் பெண் தொழிலாளியாம்.

இருவரும் இரண்டு போட்டித் தொழிற் சங்கங்களைச் சார்ந்தவர்களாம்.

மாநில முதன் மந்திரி தாணு. பிள்ளை, தொழிலாளர் மந்திரி, போலீஸ் அதிகாரி ஆகியோருக்குத் தகவல் தரப்பட்டுள்ளது. காங்கிரஸ், கம்யூனிஸ்டு ஆகிய தொழிற் சங்கத் தலைவர்களும் அங்கு விரைந்துள்ளனராம்.

இந்த 'ஹை ரேஞ்சு' தோட்டத்தில் கடந்த ஆகஸ்டு மாதத்தில் இதே போல தொழிலாளர்கள் சண்டையிட்டுக் கொண்டதும், 144 கி. பு. கோ. பிரகடனப்படுத்தி அதிகாரிகள் சண்டையை நிறுத்தியதும் நினைவிலிருக்கலாம்.

## நாகி ரெட்டிக்குப் போட்டியாக....!

ஆந்திர தேர்தலில் கம்யூனிஸ்டு தலைவரான டி. நாகி ரெட்டியை எதிர்த்து யாரை நிறுத்துவது என்பது காங்கிரஸ்காரர்களுக்குப் பெரும் பிரச்னையாயுள்ளதாம்.

சென்ற தேர்தலின்போது நாகி ரெட்டியின் மைத்துனரான காங்கிரஸ் தலைவர் என். சஞ்சீவி ரெட்டி நின்று தோல்வி கண்டார். அவரோ, அல்லது சில காங்கிரஸ்காரர்களோ சொல்வது மாதிரி நாகி ரெட்டியின் சகோதரியான ரத்னம்மா (சஞ்சீவி ரெட்டியின் மனைவி)யோ நிற்கமாட்டார்கள் எனவும், நாகி ரெட்டியை எதிர்த்துப் போட்டியிட ராமச்சந்திர ரெட்டி என்பவர் நிறுத்தப்படுவார் எனவும்கூறப்படுகிறது; திரு. ராமச்சந்திர ரெட்டிகூட நாகி ரெட்டியின் உறவினர்தான் எனத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,